**செய்தி வெளியீடு எண்: 623** **நாள்: 05.09.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (5.9.2018) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின முப்பெரும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் 130–வது பிறந்த நாளான இந்நன்னாளில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
**திரு. ஓ. பன்னீர் செல்வம் அவர்களே!**

இந்தச் நிகழ்ச்சியிலே தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
**திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே!**

இந்தச் நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிர்வாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர் **திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தினுடைய மரியாதைக்குரிய திருமதி.பா.வளர்மதி அவர்களே!

முன்னிலை வகிக்கும் தலைமைச் செயலாளர் அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றிய
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களே!
நன்றியுரை ஆற்றவுள்ள தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களே!
பள்ளிக் கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளைச்
சார்ந்த இயக்குநர்களே, இணை இயக்குநர்களே!

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

ஆசிரியப் பெருமக்களே! பெற்றோர்களே!

மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்துள்ள

கல்வித் துறை அலுவலர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது

வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறியாமை இருள் அகற்றி, கல்விச் சுடர் ஏற்றி வைத்த தத்துவ மேதை டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளும், அடிமை இருள் அகற்றி விடுதலை தீபம் ஏற்றிய கப்பலோட்டிய தமிழன்; செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்த நாளுமான இந்த நன் நாளில்....

**பள்ளியின் தூய்மைக்கு ஒருவிழா!**
**கற்றுக் கொடுப்போருக்கு ஒரு விழா!**
**கற்றுக் கொள்வோருக்கு ஒருவிழா!**

என திரிவேணி சங்கமமாய்,

முப்பெரும் விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருப்பது

மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

எனக்கு கல்வி போதித்த என் ஆசிரியர்களையும்,

அரசியல் போதித்த மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் என் மனதில் நிறுத்தி, மாணாக்கர்களுக்கு கல்வி புகட்டும் உன்னத பணியை நிகழ்த்தி கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்வில் இரண்டு அதி முக்கிய அறைகள் உண்டு.

**ஒன்று, கருவறை –** அம்மாவுடையது.
**மற்றொன்று, வகுப்பறை –** ஆசிரியருடையது.

அம்மா, வாழ்க்கையை தந்து உலகத்தை அறிமுகப்படுத்துகிறார். ஆசிரியர், அறிவை தந்து வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறார்.

ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, வாழ்க்கை, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்து, உண்மையான வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட ஆசியர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் செப்டம்பர் 5–ஆம் நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடுகிறோம்.

ஆசிரியர்கள் சமூக மேம்பாட்டின் சான்றோர்கள்;

அறிவொளி ஏற்றும் தீபங்கள்;

சுடர் விடும் தீபமொன்றில் இருந்து தான் மற்றொரு விளக்கை ஏற்ற முடியும். அதற்கொப்ப தன்னலம் கருதாது பணிசெய்து நிறைவு காண்பவர்கள் தான் ஆசிரியர்கள்.

உலகில் உன்னதமான பணி ஆசிரியர் பணி;

ஒரு தொழிலாகக் கருதக் கூடியது அல்ல ஆசிரியர் பணி என்பது; தியாகபூர்வமாக ஆற்றப்படும் தொண்டாக அது மதிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் அதன் பெருமை உயரும், மகத்துவம் மிளிரும், தனித்துவம் ஒளிரும். தியாகத்துவம் மலரும்.

ஆசிரியர்கள் தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது, கற்பிக்கும் தொழிலில் பேரார்வம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவர்கள் தான் உண்மையான ஆசிரியர்கள்.

இன்றைய தினம் தன்னுடைய சிறப்பான பணியின் காரணமாக **டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது** பெறும் 373 ஆசிரியர்களையும், தமிழ் வழி பயிலும் மாணவர்களின் அறிவார்ந்த செயல்பாட்டின் காரணமாக ''**காமராஜர் விருது**'' பெறும் 960 மாணவச் செல்வங்களையும் உளமார பாராட்டுகிறேன். சுத்தம் மற்றும் சுகாதாரம் சார்ந்து, பள்ளிகள் சிறப்பாக செயல்படுவதை அடையாளம் காட்டும் விதமாக, பாராட்டும் விதமாக மாநில அளவில் **தூய்மைப் பள்ளி** விருது பெறும் 40 பள்ளிகளைச் சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கும், அதன் பெற்றோர் ஆசிரியர் கழகங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

'**கல்வி சிறந்த தமிழ்நாடு**' '**புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு**' என்று பாரதியார் பாடினார்.

பாரதி கண்ட கனவை மெய்ப்பிக்கும் விதமாகத் தான்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்த
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்
தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த மாநிலமாக,
மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கி, அதை மேலும் முன்னெடுத்துச் செல்ல எங்களிடம் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

**தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்**
**கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்**
**கருத்தாக பல தொழில் பயிலுவோம்**

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்அவர்கள் பாடினார்கள்.

**“அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றி தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்”**

என்ற மாண்புமிகு புரட்சி தலைவி அம்மாவின்

அமுத மொழியை அடிப்படையாகக் கொண்டே

கல்வித் துறையின் ஒவ்வொரு திட்டமும் வகுக்கப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, கல்வித் துறைக்காக

முன் எப்போதும் இல்லாத வகையில் **இந்த ஆண்டில் அதிக நிதி**

**ஒதுக்கீடு செய்து** பல்வேறு திட்டப் பணிகளை செம்மையாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை

இங்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலை தூரத்தில் உள்ள பள்ளிகளினால் மாணவர்களின் கல்விக் கனவு தொலைந்து விடக் கூடாது என்பதற்காக **கிராமங்கள் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில்**

**20 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டு 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.**

மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம்

32 பள்ளிகளைத் தேர்வு செய்து,

தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன்,

கல்வி கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் வகையிலும்,

ஒவ்வொரு பள்ளிக்கும் 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு,

அவை **மாதிரிப் பள்ளிகளாக** மாற்றப்பட்டு வருகிறது. இதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு
16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசுப் பள்ளி மாணவர்கள் போதிய கணினித் திறன்களை அடையும் வகையில், **உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள்** ஏற்படுத்தப்படவுள்ளன. இதன்படி **3,090 உயர்நிலை பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2,939 மேல்நிலை பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும்** மற்றும் அவற்றோடு தொடர்புடைய மின் கருவிகளும் வழங்கப்படும்.

இந்த ஆண்டு **11 லட்சத்து 17 ஆயிரம் மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை** நான் தொடங்கி வைத்ததை இத்தருணத்தில் மகிழ்வுடன் நினைவுகூற விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் பற்றாக் குறையினால், மாணவர்களின்
கற்றல் கற்பித்தல் செயல்பாடு எந்தவிதத்திலும்
பாதிப்பிற்கு உள்ளாகக் கூடாது என்ற உயரிய சிந்தனையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி வருகிறது. அந்த வகையில் **4,362 ஆய்வக உதவியாளர்களும்,**
**2,373 முதுகலை மற்றும் சிறப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

படித்த பின்பு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில்
11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில்
தனித்திறன் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாட நூல்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் அளவிற்கு
தரம் மிக்கதாகவும், கருத்தாழம் மிக்கதாகவும்,
கண் கவரும் வண்ணங்களோடும் நம் மாணவர்களின் கைகளில் தவழ்ந்து அறிவுப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. **அதில் இடம் பெற்றுள்ள Quick**

**response என்று சொல்லப்படும் QR கோடுகள் மூலமாக இணைய தளத்தில் உள்ள எண்ணற்ற வளங்களை விரல் நுனிக்கு கொண்டு வரும் விந்தையும் விளைந்திருக்கிறது. கல்வியில் காலத்திற்கேற்ற பரிமாண மாற்றம்** மலர்ந்திருக்கிறது.

இப்புதிய பாடத் திட்டங்களை சிறப்பான முறையில் கையாளக்கூடிய வகையில், ஆசிரியர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இறுதி நேரத்தில் வெளியிடப்படும் தேர்வு கால அட்டவணையால், மாணவர்கள்

மன இறுக்கத்திற்கு ஆளாகும் நிலையினை மாற்றி,

10, 11, 12-ஆம் வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு

கால அட்டவணையும், தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் தேதியும், கல்வியாண்டின் தொடக்கத்திலேயே திட்டமிட்டு வெளியிடுவதால், மாணவர்களின் மன அழுத்தம் நீக்கப்படுகிறது.

அரசு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகி

2 நிமிடங்களுக்குள் குறுஞ்செய்தி மூலம் மாணவர்களுக்கு

அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அனுப்பப்பட்டு வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறது.

இதன் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள்

மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

14 வகையான விலையில்லா நலத் திட்டங்களை கொடுத்தார்கள். மேலும் மாணவர்கள்,

கல்வி கற்றலில் களைப்பு ஏற்படாமல் இருக்க

சத்துணவு திட்டத்தில் கலவைச் சாதம் அளித்தார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் இத்திட்டங்களை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

இதனால் கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாண்புமிகு அம்மாவின் அரசு மாற்றியிருக்கிறது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு கல்வி மட்டும் போதாது,
பொது அறிவும் தேவை என்பதை அறிந்து
மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நூல் நிலையங்களை அமைத்து வருகிறது.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக நீடித்து வந்த
நீதிமன்றத் தடை நீக்கப்பட்டு, இவ்வாண்டு
1,172 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்
பணியிடங்களுக்கான கலந்தாய்வு
வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

2018–2019 கல்வியாண்டிற்கான
ஆசிரியர், தலைமை ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வில் இணையதளம் வாயிலாக கலந்து கொண்டு அவரவர் விருப்பத்திற்கேற்ப பணியிடங்களை தேர்வு செய்து பதவி உயர்வு மற்றும் பணி மாறுதல் ஆணை பெற்றுள்ளனர்.

மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும்
கல்வி தொடர்பான ஐயங்களை தெளிவு படுத்திக் கொள்ளும் வகையில் **14417** என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டு, மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

10 மற்றும் 12–ம் வகுப்பில் பயிலும் 15 லட்சம் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் இவ்வாண்டு முதல்
இணைய வழியில் தனியார் பள்ளிகளில்
தொடக்க வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை
நடைபெறுகிறது. இதுவரை இத்திட்டத்திற்காக 400 கோடி
ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக
4 லட்சத்து 20 ஆயிரத்து 485 மாணவச் செல்வங்கள்
பயனடைந்துள்ளனர்.

பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின்போது,
அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு
எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு,
இறப்பு நேரிடின் ஒரு லட்சம் ரூபாயும்,
பெரிய காயங்கள் எனில் 50 ஆயிரம் ரூபாயும்,
சிறிய காயங்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும்,
விபத்து ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள்
அவர்களின் குடும்பத்தாரிடம் நிவாரணத் தொகை
வழங்கப்படுகிறது.

2017–18ஆம் ஆண்டிற்கான
பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது
மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பாக செயல்படும் பள்ளிகளை கண்டறிந்து, ஒரு மாவட்டத்திற்கு தலா ஒரு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என 4 பள்ளிகளுக்கு “**புதுமைப் பள்ளி**” என்ற விருதும்,
தொடக்க பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா
ஒரு லட்சமும், மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 2 லட்சமும் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 16 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 16 நடுநிலைப் பள்ளிகள், 12 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும்

12 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 56 பள்ளிகள் **புதுமை பள்ளி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு**

**புதுமைப் பள்ளி விருதுகள் மற்றும் பரிசுத் தொகையாக**

**80 லட்சம் ரூபாய் என்னால் 9.7.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது** என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதே போன்று, அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர்,

கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள் என மாவட்டத்துக்கு 6 ஆசிரியர்கள் வீதம் தேர்வு செய்து ஒவ்வொருவருக்கும் ‘‘**கனவு ஆசிரியர் விருது**’’ மற்றும் தலா 10,000/– ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயலாக்கும் வகையில்,

140 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு,

அவர்களுக்கு கனவு ஆசிரியர் விருது

என்னால் 9.7.2018 அன்று வழங்கப்பட்டது.

இவ்வாண்டு முதல் சிந்தனைத் திறன், நற்பண்புகள், பேச்சாற்றல், மற்றும் எழுத்தாற்றல் கொண்ட மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தி மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு ‘‘**இளம் படைப்பாளர் விருது**’’ வழங்கப்பட உள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் உள்ள

பல்வேறு இயக்குநரகங்களை ஒரே கட்டடத்தில்

கொண்டு வரும் வகையில் 39 கோடி ரூபாய் செலவில்

**“புரட்சித் தலைவர் நூற்றாண்டு விழா கட்டடம்”**
என்ற பெயரில் ஏறத்தாழ ஒரு லட்சம் சதுர அடியில்
கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா முடிந்து, கட்டடப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 242 பள்ளிகளில்
இடைநிலை வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு
கராத்தே, ஜூடோ மற்றும் டேக்வாண்டோ போன்ற
தற்காப்புக் கலைப் பயிற்சிகள் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு **21** லட்சத்து **78** ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டு வருகிறது.

‘‘செய்துணர்ந்து கற்றல்’’ (RAA) திட்டத்தின் கீழ்
மாணவர்களின் கள அனுபவத்தையும், அறிவையும்
மேம்படுத்தும் வகையில், **67** கல்வி மாவட்டங்களிலிருந்து **6,700** மாணவர்கள் **1** கோடியே **34** லட்சம் ரூபாய் செலவில் **விக்ரம் சாராபாய் வானியல் ஆய்வு மையத்திற்கு**
கல்வி சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில்.
**100 மாணவர்கள் மற்றும் 12 ஆசிரியர்கள்**
**தேர்வு செய்யப்பட்டு அயல்நாட்டு சுற்றுலாவிற்கு**
**அனுப்பப்பட உள்ளனர்.** இப்புதுமை நிகழ்விற்காக
**3** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும்
அனைத்து பள்ளிகளையும் திறம்பட ஆய்வு செய்யவும்,
அரசின் நலத் திட்டங்கள் அனைத்து மாணவர்களுக்கும்
கொண்டு சேர்க்கவும், ஆசிரியர்களின் குறைகளை

உடனுக்குடன் தீர்க்கவும், அனைத்து மாவட்டங்களிலும்
ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்த
67 மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும்
அதனை ஒத்த அனைத்து பணியிடங்களையும்
ஒருங்கிணைத்து தற்போது 120 மாவட்ட
கல்வி அலுவலகங்களாக அதிகரிக்கப்பட்டு
செயல்பாட்டில் உள்ளது.

ஆசிரியர் பெருமக்களுக்கு இந்த இனிய நன்னாளில்
நான் கூற விரும்புவது,
ஆசிரியர் என்பவர் கற்பித்தலில் மட்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. அவதானியாக, ஆலோசகராக,
இனம் காண்பவராக, உதவுபவராக, ஒழுங்கமைப்பாளராக, மதிப்பீட்டாளராக, இன்னும் பல பரிமாணங்களில்
தேடலுக்கு வழி செய்பவராக விளங்க வேண்டும்
என கல்வியாளர் **அறிஞர் லூயில் கோகலே** என்பவர் கூறியுள்ளார்.

ஏட்டுக் கல்வியின் வரையறையைத் தாண்டி,
பரந்த பரிமாணத்தில், சமூக பொறுப்புடன் தீர்மானிக்கும்
திறனோடு, வசீகரிக்கும் தன்மையோடு,
சினேகித மனோபாவத்தோடு,
பொது நலன் பாராட்டும் நல்லெண்ணத்தோடு,
சமூக மேம்பாட்டுக்கு வழிகாட்டும் விதமாக
ஆசிரியர் சமுதாயம் செயல்பட வேண்டும்.
அதேபோல், மாணவ சமுதாயமும் தமக்கே உரித்தான
பொறுப்பையும், கடமையையும்
உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆசிரியப் பணி என்பது ஒரு உன்னதமான பணி,

புனிதமான பணி! தியாக உணர்வும், சகிப்புத்தன்மையும், விடா முயற்சியும் கொண்டவர்கள் தான்

சிறந்த ஆசிரியர்களாக முடியும்.

எத்தனை எத்தனை துன்பங்கள் மனதுக்குள் இருப்பினும், அவற்றையெல்லாம் தன்னுள் மறைத்து,

சோகங்களை தன்னுள் அடக்கி,

சுகம் கொடுக்கும் **சிவரஞ்சனி** ராகமாக,

மாணவர்களிடம் வலம் வரும் ஆசிரியர்களாகிய நீங்கள், பாடப் புத்தகத்தையும் தாண்டி சிந்திக்கக் கூடிய மனப்போக்கை மாணவர்களிடம் வளருங்கள்.

தன்னை சுற்றியுள்ள சுற்றுப்புறத்திலிருந்து

கற்றுக்கொள்ளக் கூடிய திறமையை

மாணவர்களிடம் வளருங்கள்.

ஒரு இளம் நரேந்திரனிடம் உள்ள திறமையை கண்டறிந்து அவனை ஒரு விவேகானந்தனாக உயர்த்தினார்

அவனது குரு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவர்கள்.

அதேபோன்று நவீன இந்தியாவின் ஏவுகணை நாயகன் மாண்புமிகு அப்துல் கலாம் அவர்களிடமிருந்த திறமையை வெளிக் கொண்டு வந்தவரும் அவரது ஆசிரியர்தான்.

இதனை கூறுகையில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நாள், கோபாலன் என்ற ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன், மேய்ச்சலுக்கு சென்றபோது, பெற்ற தாய் சிங்கத்தை இழந்து அனாதையாகக் கிடந்த ஒரு சிங்கக் குட்டியை பார்த்து, பரிதாபப்பட்டு தூக்கி, ஆட்டுப் பாலை அந்த சிங்கக் குட்டிக்கு புகட்டினான். பின்னர் ஆட்டு மந்தைகளுடன், ஆடுகளுக்கு கொடுப்பது போலவே, பாலையும், புல்லையும் அதற்குக் கொடுத்து வளர்த்தான்.

நாளடைவில் ஆடுகளுக்கு இடையில் சிங்கக் குட்டி ஆடுபோலவே வளர்ந்து வந்தது.

ஒரு நாள், ஆற்றங்கரையில் மேய்ச்சலில் இருந்தபோது அங்கே வந்த ஒரு பெரிய சிங்கம் ஆடுகளின் மீது பாய்ந்தது. சிங்கக் குட்டியும் ஆடுபோல கத்திக் கொண்டு தலை தெறிக்க ஓடியது. அந்த சிங்கக் குட்டியைக் கண்ட பெரிய சிங்கத்திற்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதனை பிடித்து, ''என்னைப் போல் நீயும் சிங்கமாயிற்றே! ஏன் இப்படி ஆடு மாதிரி கத்துகிறாய்,'' என்றது. ஆனால் சிங்கக் குட்டி, தான் ஆடு என்று உறுதியாக நம்பியது. உடனே சிங்கக் குட்டியை பிடித்து, ''தண்ணீரில் தெரியும் உன் பிம்பத்தை கவனமாக பார்'', என்றது.

''நாம் இருவரும் சிங்கம்தான்'' என்றது. நீரில் தெரியும் தனது பிம்பத்தையும், பெரிய சிங்கத்தையும் குட்டி சிங்கம் மாறி மாறி பார்த்தது. பின் சிறிது சிறிதாக கர்ஜனை செய்து, முடிவில் பெரிய சிங்கத்தைப் போலவே கர்ஜிக்க தொடங்கியது. பிறகு பெரிய சிங்கத்தோடு காட்டிற்குள் ஓடியது.

இந்தக் கதையில் கூறியதைப் போல் மாணவர்களிடம் இருக்கும் அறியாமை எனும் இருளை நீக்கி, அவர்கள் தன்னகத்தே கொண்டிருக்கும் திறமையை, இயல்பை ஆசிரியர்கள் வெளிக் கொணர வேண்டும்.

ஆசிரியர் ஒருவரிடம் ''ஐயா, ஒரு மாணவர் என்பவர் எப்படி இருக்க வேண்டும் ?'' என்று ஒரு மாணவர் கேட்கிறார்.

அதற்கு அந்த ஆசிரியர், ''**மாணவன் என்பவன், கொக்கைப் போலவும், காக்கையைப் போலவும், கோழியைப் போலவும், உப்பைப் போலவும், உன்னைப் போலவும் இருக்க வேண்டும்**'' என்றார்.

அதற்கு மாணவன், ''அய்யா எனக்கு சரியாக புரியவில்லை, சற்று விளக்கமாக கூற முடியுமா ?'' என்றார்.

அதற்கு அவ்வாசிரியர்,

''கொக்கு என்பது ஓடு மீன் ஓட, உறுமீன் வரும் வரை காத்திருக்கும். வருகின்ற சிறிய மீன்களையெல்லாம் விட்டுவிட்டு பெரிய மீன் வரும் வரை காத்திருந்து கவ்வி பிடிக்கும். அதுபோலத்தான் மாணவர்கள் தனக்கு

கிடைக்கின்ற வாய்ப்புகளில் மிக நல்ல வாய்ப்பினை கண்டறிந்து அதனைக் கைகொள்ள வேண்டும்''.

''அடுத்ததாக, காக்கையைப் போல, தன் சுற்றத்தாரோடு சேர்ந்திருத்தல், தேவையான பொருட்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய பண்புகளை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டும்'' என்றார்.

''கோழியைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே,
அது எப்படி ?'' என்று மாணவன் கேட்டான்.

அதற்கு ஆசிரியர், ''கோழியை கவனித்திருக்கிறாயா ? அது குப்பையை கிளறி, தனக்குத் தேவையான உணவினை மட்டும் உண்ணும். அதுபோல ஒரு மாணவர் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டாலும், அதிலுள்ள தீய விஷயங்களை விலக்கிவிட்டு, தன் வாழ்க்கைக்கு எது தேவை; தன் வளர்ச்சிக்கு எது தேவை என்பதை கண்டறிந்து, அதன் வழி முன்னேற வேண்டும்.''

''உப்பை பற்றி கூறினீர்களே ?'' என்றான் மாணவன். உடனே ஆசிரியர், ''ஆம் உப்பு என்ன செய்யும் ? யோசித்துப் பார். உப்பில்லா உணவை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனாலும், உணவோடு உப்பினை கலக்கும்போது, அந்த உப்பானது உணவோடு கலந்து மறைந்துபோனாலும் அது உணவுக்கு சுவையை கொடுக்கும். அதுபோலவே, மாணவர்கள் தனித்தன்மையோடு செய்யும் நற்செயல்கள் மற்றவர்களுக்கு கண்கூடாக தெரியாவிட்டாலும், இந்த மாணவர்களால்தான் இது சாத்தியமாகியிருக்கிறது என்று பிறர் உணரும் வண்ணம் வாழ வேண்டும்'' என்றார்.

''சரி, என்னைப் போல இருக்க வேண்டும் என்று கூறினீர்களே, அதற்கு என்ன பொருள் ? என்று மாணவன் கேட்டான்.''

அதற்கு ஆசிரியர், ''மாணவன் என்பவன் தனக்குள் எழும் சந்தேகங்களை எந்தவித தயக்கமுமின்றி ஆசிரியர்களிடம் கேட்டு தெளிவு பெற வேண்டும் எனக் கூறுவதற்காகவே உன்னைப் போல் இருக்க வேண்டும் என்று கூறினேன்'' என்றார்.

இப்படியாக மாணவர்கள் இயற்கையிடமிருந்தும் தமக்குத் தேவையான பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியப் பணி அறப்பணி ! அதற்கே உன்னை அர்ப்பணி என்ற அர்ப்பணிப்பு உணர்வோடு ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். ஆசிரியர்-மாணவர் உறவு என்பது ஒரு பெற்றோருக்கும் அவர்களின் குழந்தைக்குமான உறவைப் போன்றது. இன்னும் சொல்லப்போனால் அதை விடப் புனிதமானது. பெற்றோர் இரண்டாவது ஆசிரியர், ஆசிரியர் இரண்டாவது பெற்றோர் என்பதை பெற்றோரும், ஆசிரியர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

**வசதியில்லாதவன் அவன் வரம்புக்குள்தான் கனவு காண வேண்டும்** என்ற வரையறைகளை உடைத் தெறிந்து, அவர்கள் வானளாவிய கனவு கண்டு, அதனை நனவாக்க உழைத்து, சாதனை படைத்து புகழ் பெற வேண்டும் என்ற முனைப்போடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு மாணவர்களுக்கு நலம் பயக்கும் பல்வேறு நல்ல திட்டங்களை உருவாக்கி அதை நன்முறையில் செயல்படுத்தியும் வருகிறது.

மாணவ சமுதாயம் நினைத்தால் எதையும் செய்ய இயலும். இதை ஆசிரியர்களும் நன்கு அறிவர். எனவே, மாணவர்களை நல்வழிப்படுத்தும் பணியில் இருக்கும் ஆசிரியப் பெருமக்கள், பாட நூல்களைத் தாண்டி, மாணவர்களுக்கு நல்லதொரு புரிதலை ஏற்படுத்த வேண்டும். தற்போது சமூக நலன் சார்ந்து தமிழ் நாடு அரசு எடுத்து வரும் சிறப்பான நடவடிக்கைகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்த வேண்டும். சக்தி மூலம் வெற்றி கொள்ள துணைபுரிய வேண்டும். அதாவது,

வேளாண் தொழிலுக்கு உதவும் குடிமராமத்து,

தண்ணீர் பற்றாக்குறையை போக்க மழைநீர் சேகரிப்பு,

சுகாதாரத்தைப் பேண வீட்டுக்கு ஒரு கழிவறை,

சுற்றுச்சூழலை பராமரிக்க பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை ஒழித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களிடம் எடுத்துரைத்து, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த இனிய விழாவில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று இங்கு, **“காந்திய அனுபவக்கல்வி மற்றும் அடிப்படைக்கல்வி”** என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளேன். இந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூறவிரும்புகின்றேன். கல்வி என்பது வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமல்ல; குழந்தைகளின் உடல், மனம் மற்றும் ஆன்மா ஆகியவை ஒருங்கிணைந்து பயிலும் கல்வியே ஒரு குழந்தையை நல்ல பண்புள்ளவனாக வளர்வதற்கு உறுதுணையாக இருக்கும். இது தற்கால சூழ்நிலைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.ன

அண்ணல் காந்தியடிகளின் 150வது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் அக்டோபர்–2, 2018, அன்று நாடு முழுவதும் தொடங்கப்படவுள்ள நிலையில் காந்தியடிகளின் பொதுக்கல்வி, அடிப்படைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை நாடு முழுவதும் கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மிகவும் சாலச் சிறந்ததாகும்.

அதன் ஒரு பகுதியாக, இன்று ‘‘அனுபவ வழிக்கல்வி: காந்தியடிகளின் அடிப்படைக்கல்வி’’ என்ற இந்த நூலை தமிழ்நாடு அரசின் சார்பில் இன்று வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலில் அண்ணல் காந்தியடிகளின் அடிப்படைக்கல்வி குறித்த கோட்பாடுகள், தொழிற்கல்வி மற்றும் பொதுக்கல்விக்கான பாடத்திட்டம், ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி மற்றும் ஆசிரியர் பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம் போன்ற பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நூலைப் பயில்வதன் மூலம் தமிழ்நாட்டில் 57,539 தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 92 லட்சத்து 36 ஆயிரத்து 192 மாணவர்கள், 12 ஆயிரத்து 471 உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் 40 லட்சத்து 41 ஆயிரத்து 789 மாணவர்கள் பயனடைவார்கள். இச்சீரிய பணியை மேற்கொண்டுள்ள தமிழ்நாடு கல்வித்துறைக்கும் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தைச் சார்ந்த அண்ணல் காந்தி கிராமியக் கல்விக் குழுமத்திற்கும் எனது பாராட்டுதலை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்பு விருது பெற்றவர்களையும், இப்போது விருது பெறுபவர்களையும் மட்டுமே சிறந்த ஆசிரியர்கள் என எண்ணிவிடக் கூடாது. அனைவருமே சிறந்த ஆசிரியர்கள் தான். விருது பெறாதவர்கள் சோர்ந்துவிட வேண்டாம். விருது பெற்றவர்கள் நின்றுவிட வேண்டாம். இந்த விருதின் மூலம் உங்களுக்கு புதிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. விருது என்கிற பயணசீட்டை தான் உங்களுக்கு வழங்கியுள்ளோம். இன்னும் நீங்கள் பயணிக்க வேண்டியது நீண்ட தூரம் இருக்கிறது என்பதை உணருங்கள். ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களாகவே இருந்து புதிது புதிதாகப் படிக்க வேண்டும். தான் படித்தவற்றை தன் மாணவர்களுக்கு தொடர்ந்து கற்பித்து வர வேண்டும். அதுதான் நீங்கள் மாணவர் சமுதாயத்திற்கு செய்யும் சீரிய தொண்டாகும். விருது பெற்றவர்களுக்கு வாழ்த்துகளையும், இந்த அருமையான விழாவை ஏற்பாடு செய்த கல்வித் துறையினருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க அண்ணா நாமம் !

வளர்க புரட்சித் தலைவரின் புகழ் !

தொடர்க புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி !

நன்றி ! வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**